786

நவம்பெரு நம்புதாளே,

ஞானானந்த பக்கீர் முகம்மது மஸ்தா
னெனும் பெயர் வளங்கா நின்ற
புண்ணியசீல சுவாமிகளின்,

தீர்த்தானந்த கீர்த்தனமாம்.

இஃது,

தொண்டி, மு. க. செ.
மஹ்றிகரீபா அவர்கள் முயற்சியால்
சேகரிக்கப்பெற்று

மதுரை,

ஸ்ரீ ஜெகதாம்பாள் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1931

ரிஜிஸ்டர் காப்பிரைட் [அணா 1

முன்னுரை என்னும் நன்னுரையாம்

ஹிந்து முஸல்மான் சகல கனவான்களுக்கும் தெரிவிப்பதாவது:
மேன்மைதங்கிய பக்கீர் முஹம்மது மஸ்த்தானெனும் மெய்ஞான சிலருடை
மகிமை வாய்ந்த தந்தையின் திருநாமம் செயினு முஹம்மது. தாணியி
சிறந்த தாயாரவர்கள் பெயர் சௌரம்மாள் பீபீயாகும். மெய்ஞான யோ
ரென்னும் மேதினியில் துதிக்க வந்த மௌனநந்த பக்கீர் மஸ்த்தானவர்
பன்னுலாய்ந்து பகலிரவெலாம் பலநாள் பசியுடனிருந்து பயன்றரும் ந
வம் பண்புடன்புரிந்து பாரினில் சிறந்த பாண்டித்திய யோகரெனும் பக்
மஸ்த்தானவர்கள் கொடுக்கும் தீர்த்தத்தால் தீராப்பிணிகளெல்லாம் தீர்
பிள்ளையில்லாதவர்களுக்கு பூவும் எலுமிச்சம்பழமும் புனிதமாகக் கொடுத்
அதை சாப்பிட்ட பின் அநேகருக்கு பிள்ளை சந்தானம் உண்டாகியிருக்கிறது
எத்தனையோ ஜனங்களுக்கு கண் சீக்கு பாரிசவாய்வு, சூதகம் ஊமை செவிடு,
வலிப்பு, பிசாசம், பில்லி, சூனியம், சித்தபேதம், குன்மம் இன்னு மெத்தனை
யோவிதமான சீக்குகளெல்லாம்தீர்ந்திருக்கிறது. ஆனதால், மேன்மைதங்கிய
மஸ்த்தானவர்களிடம் சென்று திருப்பாற்கடற் தீர்த்தமெனும் திருவமிர்தத்
தை சிறப்புடன் பெற்று தினந்தோறும் சாப்பிட்டு சிரோங்கி செழிப்புடன்
வாழ்வீர்களாக.

கடவுள் துணை.

புதாலிள் மௌனயோகமஸ்தானெனும் சுவாமிகளால்
அருளிய சௌபாக்கிய தீர்த்தத்தை

உபயோகப்படுத்தும் விதம்.

ஞானனந்த மௌனமஸ்தானெனும் சுவாமிகளின் சொல்
க்கிணங்க அன்னவர்தரும் அமிர்தத்தீர்த்தத்தை அடவுடன்பேணி
ரகத்தில் பூசிக்கொண்டும் கொஞ்சத்தை சாப்பிட்டுக்கொண்டும்
நால் உபயோகித்து வந்தால் வாதம் பித்தம், வலிப்பு, வஞ்சனை
ரியம், கட்டி, சிலந்தி, சூதகம், வாய்வு நயனநோய், கபாலநோய்,
மை, செவிடு நரம்புநோய் வகையறுக்களாகிய 4448 நாலாயிரத்தி
னூற்றி நாற்பத்தெட்டு வியாதிகளும் நாயனுடைய கிருபையால்
ங்கிவிடும் இன்ஷாஅல்லாஃ.

இந்த தீர்த்தாநந்த செந்தமிழ் கீர்த்தனையை திங்களும்
வெள்ளியும் தீபதூப வாசனையுடன் இருந்து மௌனகுருமஸ்த்தா
னெனும் சுவாமிகளை மனதில் தியானம் பண்ணி ஓதிவருவீர்களா
யில் உங்களின் நாட்டம்நிறைவேறி நற்பலன் பெருவதற்கு கடவு
ரின் கிருபைஉண்டாகக்கடவீர் சுவாமிகள்தியானித்து தந்த எலு
மிச்சம்பழத்தை தீர்த்தத்தில் பிழிந்து, 7 தினம் சாப்பிட்டுவரவும்
அவர்கள்தரும் புஷ்பத்தையும் சாப்பிட்டுக்கொள்ளவும் பிள்ளைஇல்
லாதவர்களுக்கு பிள்ளைப்பேறுபாக்கியம் ஆண்டவனின் அருளினல்
உண்டாகுமென நம்பிக்கைவைத்து நாயனைப்புகழ்ந்துகொள்வீர்க
ளாக.

நவம்பெறு நம்புதாளை ஞானனந்த பக்கீர் முகம்மது
மஸ்தானெனும் பெயர் வளங்கா நின்ற
புண்ணியசீல சுவாமிகளின்

தீர்த்தானந்த கீர்த்தனமாம்.

கதருடையேவருது (என்ற மெட்டு)

பல்லவி

திருவமுதே வருது
தீர்த்தமிதோ தருது
தேசத்தின் மக்களுக்கோர்
ஜெயம் தோணுது
குருபாதமே துதித்து
திருநாமமே நினைத்து
கோடானு கோடிஜனம்
கூண் டேகுது

தொகையறு

வினியோக மானதோர் கனிபோன்ற தீர்த்தத்தை
வேண்டியே ஊண்டிநின்றோம்
வீரான பிணியைநாம் வேறோ டறுத்துமே
வீசியே துலைத்துவிட்டோம்

பல்லவி எடுப்பு

வெறும்வேஷக் காரர்செய்யும்
விபூதியை வெறுத்து
வேண்டிக்கொள்வீர் மஸ்த்தான்
பதமதை யடுத்து
இனிதொடு இந்தியா
இமயகிரி வரைக்கும்
இலங்குது மஸ்தான்மயம்
துலங்குது பார் (திரு)

ஓராணுகொடுத் திந்த
உத்தமர் புஸ்தகத்தை
உன்மனம் கனிந்துதான்
வாங்கிடு வாய் (திரு)

பாரதமாதாவின் பாண்டித்தியராய்ப்பிறந்த
பக்கீர்மஸ்த்தானைநீ பார்த்திடுவாய்

கலியுகச்சிந்து மெட்டு

மஸ்த்தானைப் பாராய்
மஸியோகப் புதுமையின்
விஸ்த்தாரம் கேளாய்

மஸ்த்தானின் ஒஸ்த்தியை
பஸ்த்தியின் மேலோத
கஸ்த்தியொன்றில் மாதே
சுஸ்த்தித்தீர்த்தம் தந்த (மஸ்த்தானை)

தவசி தனைக்கண்டு நவசிவ னாகுது
தையலும் பையலும் வையமீ தேகுது
அவசிய மென்றுதா னவர்முன்னில் சேருது
ஆதித்தன் ஜோதிபோல் ஒதித்தீர்த்தமீது
ஊதியே தந்தார்
உங்களுள்ப் பிணியெல்லாம்
தீர்ந்திட வந்தார் (மஸ்த்தானை)

சித்தர் புகழ்ந்திடும் திருநம்பு தாளையில்
பத்தர் உகந்திடும் பக்கீரு மஸ்த்தானின்
சுத்தத் திருத்தீர்த்தம் சித்தத்தின் மேல்க்கொண்டு
செந்திரு மாதுபோல் பந்தவினை நீங்கி
க்ஷேமம்நீ வேணு
ஜெகம்புகழ் பக்கீர்நன்
மஸ்த்தானைக் காணு (மஸ்த்தானை)

பிரம குலமென்றோர் பரவச மாகிறார்
பிரதான வைசியர் தினம்வந்து சேர்கிறார்
சரமாரி போலவே க்ஷத்திரிய ரேகுறார்
சால குணநிறை சூத்திரர் சூழ்கிறார்
சௌபாக்கிய மாதே
தவசித்த ரால்த்தந்த
தீர்த்தத்தை ஓதே (மஸ்த்தானை)

தீர்த்தம் தீர்த்தமுண்டு ஜெயசீல ராகவும்
சிங்கார மாயெங்கும் மங்காது வாழ்கவும்
பார்த்தோம் பார்த்தோமென்று பல்லாசி கூறவும்
பற்றிய மனதுடன் முத்தி தீர்த்தம்பெற்ற
பாக்கிய வதியே
பைங்கிளி போல்நின்ற
யோக்கிய வதியே (மஸ்த்தானை)

அருணை தயங்கண்ட அரவம்போ லாகிறார்
அவனியோர் மஸ்த்தானை அணுகியே கூடுறார்
வருணச் சரமின்றி வந்தடி பணிகிறார்
வன்பிணி தீரவே யின்ப முடனீதை
வாங்காயோ மாதே
வெள்ளியுந் திங்களும்
பாங்காய்நீ ஓதே (மஸ்த்தானை)

வழிநடைச்சிந்து மெட்டு

செந்திரு மலர்மாதே—தீர்த்தம்
ஜெகத்தினி லதன்குணம் உறைக்கின்றேன் கேள் (செந்திரு)

திருப்பாற் கடலமுதாம்—மஸ்த்தான்
திருவிளை யாடலின் தீர்த்தமதாம்
மறுப்பா ரெவருமுண்டோ—மஸ்த்தான்
மௌனத்தி லுதித்தமந் திரமிதுவாம் (செந்திரு)

இன்னரி பொன்சிதம் பீர்—இயங்கும்
கிண்கிணி சூடிய பைங்கொடியே
பொன்னவிர் மின்மயமே—புகழும்
பூவடங் தாங்கிய புனலெடுத்தாய் (செந்திரு)

பெண்மணி யெனுமடவீர்—பிரமைப்
பிணிபல போக்கிய புதுமையைப்பார்
உன்பிணி ஒருவுருவாய்—உன்னில்
உலவவி டாமலே ஓட்டிடுவார் (செந்திரு)

பொன்னணி புஜமுடையார்—மஸ்த்தான்
புவனத்தில் பூஞ்ஜரி பூண்டுவந்தார்
சென்னிறப் பொன்மயம்போல்—ஜரிகை
ஜொலிக்கும் ஜிமிக்கிஜரி சூட்டினங்கார் (செந்திரு)

அம்புவி மின்மயிலே—அமிர்தம்
அருளிய மஸ்த்தானை நம்புவாயே
தெம்புறும் திரவியமாம்—தீர்த்தம்
திருப்பாற் கடலுறும் திருவமுதாம் (செந்திரு)

மின்னவிர் பொன்ஜரிகை—ஜிமிக்கி
மினுமினு வெனவிரு பூவடமும்
அன்னவர் புஜமேந்தி—மஸ்த்தான்
அவணியில் வருவதைப் பவணிபாராய் (செந்திரு)

பின்னிய வம்பிணிகள்—பில்லி
வஞ்சனை சூனியம் போய்விடுமே
கன்னியே நின்மனதில்—கனக
மஸ்த்தானை உன்னியே தீர்த்தம்கொள்வாய் (செந்திரு)

அன்னமென் னடையுடை யோய்—அகில
அரைப்பணம் கொடுத்திதை வாங்கிக்கொள்வாய்
உன்னகத் துறும்பிணிகள்—ஒளித்து
ஒடுமே யிதைநிதம் பாடுவதால் (செந்திரு)

பால்காவடியானந்தம் (என்ற மெட்டு)

பல்லவி

தீர்த்தம் அருளும் மஸ்த்தான் தனை நினைந்
தேகலாம் வாராய் மானே (தீர்த்)

அனுபல்லவி

பூமாது போற்றும்
புண்ணியர் தீர்த்தம்
பூமீதி லெங்கணும்
போற்றிசெய் வார்தினம் (தீர்த்தம்)

எத்தனை செகுடு
ஏகமாய்க் குருடு
அத்தனையும் தீர்ந்து
அவனியில் தோணுது (தீர்த்தம்)

நானிலம் புகழும்
நாதாந்த சுவாமிகள்
தேனினு மிக்கதோர்
தீர்த்தம்தந் துதவுவார் (தீர்த்தம்)

வித்வ பாண்டியே மீனாக்ஷி (என்ற வர்ணம்-பின்மகுடம் வேறு)

சருவஞானம் தெரிந்தால் மானம்
ஜெயமில்லார்க்கு ஆமோகாணும் (சருவ)

அனுபல்லவி

ஜெகத்தி லாநந்தா தீர்த்தம்
தானுந்திரு ஜெகமீதினில்
கூனுங்குரு டகல்செய்தவா (சருவ)

சரணம்.

பெருமைத்திரு ஜெப தீர்த்தம்
அருமைத்தரு வெனத் தோத்தம்
பொறுமைக்குண முறு மஸ்த்தான்
பேணுஞ்ஜெய தீர்த்தம்பெற
நாணும்மட வாரும்வர (சருவ)

அருமைக்குரு பா மாலை
திருமெய்த் தரு நம்புதாளை
பெருமைக்குரி யவன்வேலை
பேசும்தமிழ் எங்கும் சுக
வாசங்கமழ் ஒங்கும் குக (சருவ)

மேரே மவ்லாபுலாலோ. (என்ற மெட்டு.)

பல்லவி.

மாரா மௌனுப்பூபாலா மவி ஞான லோலா

(தோகையரு.)

ஞாலமீதுயர் கோல காரண
சீலராமெனும் சோபிதா
நீலமாமயி லாடுமற்புத
நீதியேதிருக் கர்ப்பிதா

தொடர்

நீதா நினைவில்லையா (மாரா)
நித போத மயா

(தோகையரு)

மோனமேயருள் ஞான பண்டித
தியான மண்டல தேவதே
தியானஉமை தானமாய்ப்பெற
தாழ்பணிந்தேன் தயாநிதே

தொடர்

தாரா தரப் போருளே (மாரா)
தவமா முகிலே

(தோகையரு)

இல்லல்லாஃ வெனும் சொல்லி விதோவெனை
ஆட்டுதே தவத்தாயகா.
சொல்லல்லால் சுகமில்லைகண்டிடும்
நம்புதாளையின் நாயகா.

தொடர்

நல்ல தீர்த்த மிதோ (மாரா)
நம்புவோர்க் கருள்வீர்

ஸ்ரீ தராசௌபாக்கிய ஞான
ஜெம்மலே இன்னும் வாராததேன்

அனுபல்லவி

மாதவா மலர் பாதமே புகழ்
மன்னரே குரு என்பிதா
வேதநாயகன் ஓதும் என்ஜெக (ஸ்ரீ)
நாதனே இன்னும் வாராததேன்

கண்டவர் தொழ நிண்ட நாயக
தண்டம் செய்தேனென்னண்பரே

அண்டமேயருள் கண்டகாரணா
ஆரியே இன்னும் வராததேன் (ஸ்ரீ

அருளெனும்சிபத் தான அண்டத்தில்
ஐனைக்கடந்த மெய் ஆரணா
குருபாரொரு வழியைக் காட்டிட
கோவே யின்னும் வராததேன் (ஸ்ரீ)

அல்விராப் பகல் தொல்லைதீர்ந்திட
அண்டினோர்க்கருள் நாயகா
நம்புதாளையின் ரமண பரிமள
ஞானசானுவே வராததேன் (ஸ்ரீ)

பூங்காவிநோத (மென்ற மெட்டு)

பல்லவி

இன்னும் தாமதமேன்
எழில் நம்புதாளை ஞானகுருவே (இன்)

அனுபல்லவி சிட்டைகள்

நண்ணும்நய முறவே நமதருள்
பண்ணும்பவ மறவே அனுதினம் (இன்)

தாணியிலருள்பல குறவர்க ளடிதொழு
மாகத மணிமலர் மிசைஎனக் கருள்தா (இன்)

சப்தசாகரம் கடந்த
சுத்தசாது வேநீர்வா (இன்)

துங்கெங்கும் தங்கிங்கித
பங்கெங்கும் கணசங்கிதா (இன்)

சரணம்

திங்கள்குணம் தங்கும் மௌன
தீவிரஞான பராபரமோன
தங்கும்தாளையானே நம்பு
தாளைக்கொரு காரணமான

தீதகலவேயரிந்த ஆரணா சொல்லும்
நம்புதாளை யிற்பிறந்த பூரணா

நயகமல மோனா
நாதாந்த சுரக்கியானா
நவம்பெறவே கோனா
நலந்தருவீர் தானாய் (இன்னும்)

முற்றும் சுபம்

ஸ்ரீ ஜெகதாம்பாள் பிரஸ், மதுரை